LIBRARY
6 DEC 1963
LEGISLATURE, MADRAS

THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Monday, 18th March 1963.

The House met in the Assembly Chamber, Fort St. George, Madras, at half-past eight of the clock, Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPPANDIAN) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS

STARRED QUESTIONS.

பஞ்சாயத்து யூனியன்களில் பணியாற்றும் ஆசிரியர்கள்

* 268 கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து: கனம் நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

பஞ்சாயத்து யூனியன்களில் பணியாற்றும் ஆசிரியர்களை கலெக்டர் நிர்வாகத்திலுள்ள உயர்நிலைப் பள்ளிகளுக்கு சர்வீஸ் கண்டிஷன்களுடன் எடுத்துக்கொள்வது சம்பந்தமாக மாவட்ட மன்றங்கள் மூலமாக கோரிக்கைகள் வந்தனவா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஆம்; அவைகளின் மேல் தக்க உத்திரவுகள் அனுப்பப்பட்டுள்ளன.

திரு. எஸ். மாதவன் : பஞ்சாயத்து யூனியன்களில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு சர்வீஸ் ரிஜிஸ்டர் வைக்காமல் இருப்பது அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறதா ? உடனடியாக சர்வீஸ் ரிஜிஸ்டர் வைக்குமாறு அரசாங்கம் உத்தரவிடுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதைப்பற்றி என்னிடம் இப்பொழுது தகவல் இல்லை.

திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை : இப்பொழுது அரசாங்கம் வெளியிட்டிருக்கும் புதிய ஜி. ஓ. வின் காரணமாக ஒரு ஆசிரியருக்கு 79 பிள்ளைகள் இருந்தால், அதற்கு மேல் தான் இரண்டாவது ஆசிரியர் போடவேண்டுமென்று அரசாங்கம் வெளியிட்டிருக்கும் உத்தரவு கூறுவதால், அனேக ஆசிரியர்களுக்கு வேலை இல்லாமல் போகும். இதைப்பற்றி அரசாங்கம் கவனிக்குமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இதைப்பற்றி முன்பே இரண்டு, மூன்று முறைகள் விளக்கியிருக்கிறேன். 35 சத வீதம் இருக்க வேண்டுமென்ற உத்தரவு ஒவ்வொரு பள்ளியிலும், ஒவ்வொரு வகுப்பிலும் அல்ல. அந்தந்த யூனியன், அதற்கு மேலும் அந்தந்த வட்டாரத்திலும் மொத்தமாகக் கணக்குப் பார்த்து இதைச் சரிக்கட்டவேண்டும் என்பதுதான் அரசாங்கத்தினுடைய எண்ணம்.

காடுகள் (அறந்தாங்கி வட்டம்)

* 269 கேள்வி.—திரு. ஆ. துரை அரசன் : கனம் கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) அறந்தாங்கி தாலுகாவில் அரசினருக்குச் சொந்தமான காடுகள் எத்தனை எக்கர் ?